Registered as a News Paper

பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

நல்லூர் ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மாசி 10 | [21 - 02 - 1993] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 03

## புற்றுநோயாளர்கள் வடபகுதியில் அதிகரிப்பு

வட மாகாணத்தில் அண்மைக்காலமாக புற்றுநோயாளர் தொகை அதிகரித்திருப்பதாக வடமாகாண புற்று நோய் தடுப்புச்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக புற்றுநோய் வகைகளில் வாய்ப்புற்று நோயே அதிகமாகக் காணப்படுவதாகவும் மேலும் இதற்கான காரணிகள் நன்கு தெரிந்தவை எனவும் இதுசம்பந்தமான சுகாதார கல்வி நடவடிக்கைகள் மேற்படி சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வருகின்றன (6 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலிக் கடலில் பயணிகள் மீது சுடுவதற்குபடைக்குஅதிகாரமில்லை

## படுகொலைகள் குறித்து விசாரணை; மனித உரிமை அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

கிளாலி கடல் நீரேரியில் பொதுமக்கள் பயணம் செய்ய சிறிலங்கா அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள தடை, அவ்வழியால் பயணம் செய்யும் பொதுமக்களை சுடுவதற்கு, படைக்கு அதிகாரமளிக்கவில்லை என கொழும்பிலுள்ள மனித உரிமைகள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த மாதம் முற்பகுதியில் இக் கடல் நீரேரியில் பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து புலன் விசாரணை நடத்தவேண்டும் என இம் மனித உரிமை அமைப்பு சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

கிளாலிக் கடல்நீரேரிபொது மக்களின் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருப்பதால் இவ்வழியாகப் பயணம் செய்யும் மக்களைச் சுட்டுக்கொல்லுவதற்கு படையினருக்கு அதிகாரம் எதுவும் இல்லை. சட்டத்தை மீறி வாவியைக் கடப்போரை தடுத்து நிறுத்துவதற்கு மட்டும்தான் படையினருக்கு அதிகாரம் உண்டு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாதம் மேற்படி வாவியில் பயணம் செய்த படகுப் பயணிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் உயிர்தப்பிய மதகுரு ஒருவர் மேற்படி மனித உரிமைகள் குழுவிடம் இச்சம்பவம் குறித்து வாக்குமூலம் வழங்கியிருக்கின்றார்.

## வாகனம் மீது ஹெலி தாக்கு

(கொடிகாமம்)

சிறிலங்கா அரசிற்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று கடம்புலியடி சரசாலைப்பகுதியில் தாக்குதல் நடாத்தியது. வீதியால் சென்ற வாகனம் ஒன்றின் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாக தெரியவருகிறது. [86]

## மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டுவரும் மீட்புநிதி சேகரிப்பு இன்று (சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முற்பகல் 8 மணிதொடக்கம் 11 மணிவரை மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் உடுவில், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது

மேலும் நாளை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் மீட்புநிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளதாகத் தமிழீழ மீட்புநிதிப்பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் வலிமேற்கு செல்வர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ பிடியில் சிக்கி இருக்கும் மாதகல், இளவாலை பகுதியில் உள்ள மக்களை பார்வையிடுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இருவர் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளனர்.

யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இருவரும் இன்று 'குமாரி' கப்பல் மூலம் தமது பயணத்தை மேற்கொள்வார்கள். இவர்கள் சுமார் இரண்டு நாட்கள் அங்கு தங்கி இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். வரும் உத்தேசம் இப்போதைக்கு இல்லை

### – அங்கிலிக்கன் ஆயர்

(கொழும்பு)

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயரான கெள்ளத் பெர்னாண்டோ இப்போதைக்கு யாழ்ப்பாணம் செல்லும் நோக்கம் எதுவும் தமக்கு இல்லை என்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கும் போது தெரிவித்தார்.

பூநகரி பாதை திறப்பு விவகாரம் பற்றி அவரிடம் கேட்ட போது இதன் பின்னணியில் உள்ள தார்ப்பரியங்கள் எதுவும் தெரியாததால் அதுபற்றி எதையும் கூறப்போவதில்லை ...

## பலாலி முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சு

(வடமராட்சி)

வலிகாமம் வடக்கு பகுதிகளை நோக்கி இரண்டு வேறுபட்ட தளங்களில் இருந்து பல ஆட்லறி ஷெல்கள் ஏவி விடப்பட்டன.

நேற்று அதிகாலை 4மணிக்கும் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கும் இடையில் அப்பகுதியை நோக்கி பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து பதினைந்துக்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

இவை அச்சுவேலி, வளலாய், இடைக்காடு பகுதிகளில் விழுந்து வெடித்ததாக அப்பகுதியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. [யோ]

## சிறுவர் இல்ல மாணவர் நேற்று ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்க சிறுவர் இல்ல ...

நேற்று ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

மேற்படி சங்கத்தில் இருந்து ...

## வவுனியாவில் புலிகள் தாக்குதல்

வவுனியா பள்ளிமடுவிற்கு தெற்கே மூன்று இராணுவக் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாக சிறிலங்கா படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## யாழ். வைத்தியசாலை ஜெனரேற்றர் பழுது

ட்டுவரும் மீட்புநிதி சேகரிப்பு இன்று [சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முற்பகல் 8 மணி தொடக்கம் 11 மணிவரை மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் உடுவில், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை மருதனார்மடம் இராம

பெறவுள்ளது

மேலும் நாளை சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் மீட்புநிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளதாகத் தமிழீழ மீட்புநிதிப்பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

# செஞ்சிலுவை பிரதிநிதிகள் வலிமேற்கு செல்வர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ பிடியில் சிக்கி இருக்கும் மாதகல், இளவாலை பகுதியில் உள்ள மக்களை பார்வையிடுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இருவர் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இருவரும் இன்று 'குமாரி' கப்பல் மூலம் தமது பயணத்தை மேற்கொள்வார்கள். இவர்கள் சுமார் இரண்டு நாட்கள் அங்கு தங்கி இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ். வரும் உத்தேசம் இப்போதைக்கு இல்லை

**– அங்கிலிக்கன் ஆயர்**

(கொழும்பு)

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயரான கெனத் பெர்னாண்டோ இப்போதைக்கு யாழ்ப்பாணம் செல்லும் நோக்கம் எதுவும் தமக்கு இல்லை என்று செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கும் போது தெரிவித்தார்.

பூநகரி பாதை திறப்பு விவகாரம் பற்றி அவரிடம் கேட்ட போது இதன் பின்னணியில் உள்ள தார்ப்பரியங்கள் எதுவும் தெரியாததால் அதுபற்றி எதையும் கூறப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்

(கொழும்பு)

கிளாலி கடல் நீரேரியில் பொதுமக்கள் பயணம் செய்ய சிறிலங்கா அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள தடை, அவ்வழியால் பயணம் செய்யும் பொதுமக்களை சுடுவதற்கு, கடற்படைக்கு அதிகாரமளிக்கவில்லை என கொழும்பிலுள்ள மனித உரிமைகள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த மாதம் முற்பகுதியில் இக் கடல் நீரேரியில் பல பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து புலன் விசாரணை நடத்தவேண்டும் என இம் மனித உரிமை அமைப்பு சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

கிளாலிக் கடல்நீரேரிபொதுமக்களின் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருப்பதால் இவ்வழியாகப் பயணம் செய்யும் மக்களைச் சுட்டுக்கொல்லுவதற்கு படையினருக்கு அதிகாரம் எதுவும் இல்லை. சட்டத்தை மீறி வாவியைக் கடப்போரை தடுத்து நிறுத்துவதற்கு மட்டும்தான் படையினருக்கு அதிகாரம் உண்டு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாதம் மேற்படி வாவியில் பயணம் செய்த படகுப் பயணிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் உயிர்தப்பிய மதகுரு ஒருவர் மேற்படி மனித உரிமைகள் குழுவிடம் இச்சம்பவம் குறித்து வாக்குமூலம் வழங்கியிருக்கின்றார்.

# பலாலி முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சு

[வடமராட்சி]

வலிகாமம் வடக்கு பகுதிகளை நோக்கி இரண்டு வேறுபட்ட தளங்களில் இருந்து பல ஆட்லறி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

நேற்று அதிகாலை 4மணிக்கும் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கும் இடையில் அப்பகுதியை நோக்கி பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து பதினைந்துக்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

இவை அச்சுவேலி, வளலாய், இடைக்காடு பகுதிகளில் விழுந்து வெடித்ததாக அப்பகுதியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[யோ]

## வவுனியாவில் புலிகள் தாக்குதல்

வவுனியா பள்ளிமடுவிற்கு தெற்கே மூன்று இராணுவக் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாக சிறிலங்கா படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சிறுவர் இல்ல மாணவர் நேற்று ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்க சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்கள் நேற்று ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

மேற்படி சங்கத்தில் இருந்து ஆரம்பமாகிய இந்த ஊர்வலம் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தை அடைந்தது. சிறுவர்கள் மீது முறைகேடாக நடந்துகொண்ட முன்னாள் முகாமையாளர் மீது விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று கோரி இந்த ஊர்வலம் நடாத்தப்பட்டது.

[ 6 ஆம் பக்கம் பார்க்க )

# யாழ். வைத்தியசாலை ஜெனரேற்றர் பழுது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் 15 கிலோவாற்றஸ் மின்சக்தியைப் பிறப்பிக்கும் மின்வழங்கி பழுதடைந்ததால் மின்விநியோகம் பாதிப்படைந்துள்ளது.

இந்த மின் வழங்கியை திருத்தி அமைக்கும்வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மின் விநியோகிக்க வேண்டியநிலைஏற்பட்டுள்ளது இதனால் அத்தியாவசியப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் இருளில் பல மணி நேரங்களாக மூழ்கியுள்ளன.

# 14,000 தமிழ் மக்கள் அம்பாறையில் இடம்பெயர்வு

[யாழ்ப்பாணம்]

"அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் மற்றும் சிங்கள முஸ்லிம் குண்டர்களின் அச்சுறுத்தல்கள் காரணமாகச் சுமார் 14,000 அப்பாவித் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளனர்" இவ்வாறு மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்பொழுது அம்பறையில் உள்ள திருக்கோவில் தம்பிலுவில் ஆகிய இரு கிராமங்களில் மட்டுமே தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஏனைய கிராம மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பின் எல்லையோரக் கிராமங்கள் யாவும் சிறிலங்காப் படைகளின் தாக்குதலால் அழிக்கப்பட்டுள்ளன. கல்லோயாத் திட்டத்தில் உள்ள பல கிராமங்களும், புல்லுமலைக் கிராமமும் அழிக்கப்பட்டுள்ளது.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மண்முனை அகதிமுகாம்கள் அரசால் புறக்கணிப்பு

[மட்டக்களப்பு]

மண்முனை வடக்குப் பிரதேசச் செயலகப் பிரிவில் உள்ள அகதிகள் முகாம்களின் பராமரிப்பிற்கு அரசாங்கம் நிதி எதனையும் ஒதுக்காது புறக்கணித்துள்ளது.

இதனால் கடந்த ஒருமாதத்திற்கு மேலாக இம் முகாம்களில் எந்தவித பராமரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

முகாம்களிலுள்ள அகதிகளுக்கு உலர் உணவுப் பொருள்கள் மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் அடிப்படைவசதிகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 90 வீதமான அகதிமுகாம்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிச் சூடு

[கொடிகாமம்]

கிளாலி கடலில் நேற்று முன்தினம் இரவு 11-45 மணியளவில் சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதே வேளை ஆனையிறவு முகாமிலிருந்தும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

[86]

# மிதிவெடியில் காலை இழந்தார்

[(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைப் பகுதியில் நேற்று மிதிவெடியில் சிக்கிய பெண் ஒருவர் தனது காலை இழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது

அராலிதெற்கிலிருந்துஇடம்பெயர்ந்து யாழ். புகையிரத நிலையஅகதிமுகாமில்வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாயாரான கோணேஸ்வரி சுப்பிரமணியம்(வயது 27) என்பவரே இவ்வாறு காலை இழந்தவராவார்.

முகாமிலுள்ளபெண்களுடன் சேர்ந்து கோட்டைப் பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# பல்கலை அனுமதியில் தாமதம் ஏற்படலாம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் பல்கலைக்கழகங்களின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள முடக்கத்தினால் இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதி தாமதமாகலாம் என மானியக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வெளிவாரி மாணவர்களின் பரீட்சையும் ஒத்திவைக்கப்படவேண்டிய நிலை ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த [உயர் தர]ப் பரீட்சையில் ஒரு

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

**உளவாளிகள்!!!**

**அவதானமாக இருக்கவும்..!**

சந்தியில் நாம் பேசும் சாதாரண விடயங்களே

உளவாளிகள் தேடும் பெரிய விடயங்கள்

## வரி விளம்பரம்

### துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ். மற்றும் சலனம், சுபமங்களா, மூன்றில், ஆகவே, காலம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, விருச்சுனாவீதி, யாழ்ப்பாணம். [4061]

### சலனம்

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு, வசந்தம் புத்தக நிலையம். 405. அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (4063)

### திருக்கணித பஞ்சாங்கம்

ஸ்ரீமுக புதுவருட (1993-94) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது வியாபாரிகளுக்குத் தகுந்த கமிஷன் உண்டு விலை ரூபா 65 00 பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம். [4281]

### புலமைப் பரிசில் பரீட்சை

வருடந்தோறும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை 21. 02 93 ஞாயிறு மு ப. 8 00, மு. ப. 11.00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4320)

### சைனா மசின்

கொப்பிகள், புத்தகங்களுக்கு கவர்போடக்கூடிய சைனா மசின் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனாவீதி யாழ்ப்பாணம். (4062)


## இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா

புங்குடுதீவு, நயினாதீவு

ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

### 13ஆம் நாள் நிகழ்ச்சிகள்

### 21- 2 - 93 (ஞாயிறு) இன்று

### இடம்: மன்றக் கலாமண்டபம்

மாலை 4.00 — 5 00 மங்கள இசை

நாதஸ்வரம் : என். கே. கணேசன்
ஆர். சண்முகம்
கே. சிவதாஸன்
என். சண்முகம்

தவில் : என். கே. வீரசாமி
கே. ஆர் வீராசாமி
என். கணேசமூர்த்தி
கே. ஷண்முகநாதன்

5.00 — 5.20 வீணை

ரி. பிரேமினா, ரி. புனிதாவட்சமி,
ஆர். சுதர்சனா, எஸ். ஜெயமனோகரி
எம். காதம்பரி ப. அம்பிகை

மிருதங்கம் : ரி. திருக்குமரன்

5 20 — 5 40 பாட்டு

எஸ். சுவிதா
என். லொயிஸ் சனுஷியா
பி. பாமினி, ஜே. ரனிந்தா,
ஜை. ஜெயபாரதி.
ஆர். அஷ்டலட்சுமி

வயலின் ; கிருஷ்ணவேணி மயில்வாகனம்

மிருதங்கம் ; பி. ரதிருபன்

5 40 — 6 00 இருவயலினிசை

வித்யாசங்கர் திருமாறன்

மிருதங்கம் ; சதாவேல்மாறன்

6 00 — 6.45 பாட்டு ஹஸ்லானந்தி லேதுபதி

வயலின் ; சாந்தநாயகி சுப்பிரமணியம்

மிருதங்கம் ; எம். சிதம்பரநாதன்

6.45 — 7 00 மங்கள விளக்கேற்றல்

டாக்டர் கே. பாலசுப்பிரமணியம்
திரு. கார்லிங்கம் [காலோ]
திரு. தா பரராஜசிங்கம்
[அம்பாள் காட்வர் நீர்வேலி]
திரு. வே. வடிவேல் [வர்த்தகர்]
திரு. கா. பரமானந்தராஜா
(வர்த்தகர்)

தலைவர் : பி. கனகலிங்கம் (தலைவர் ப. நோ. கூ. சங்கம் புங்குடுதீவு)

சிறப்புவிருந்தினர்: பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) (யாழ். பல்கலைக்கழகம்)

# நெல்மூடைஎடுத்துச்செல்லவும் மட்டக்களப்புராணுவம்கெடுபிடி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல்லை ஓர் இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கு இராணுவம் புதிய தடையுத்தரவை விதித்துள்ளது

இதுபற்றி தெரியவருவதாவது சம்பந்தப்பட்ட பிரதேச இராணுவ அதிகாரியின் அனுமதிப்பத்திரத்தை பெற்றே நெல்லைக் கொண்டு செல்ல வேண்டுமென்றும், அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அறுவடை செய்த காணியின் உறுதி சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீதித்தடையை மேற்கொள்ளும்வான் படையினர் நகருக்குக் கொண்டு வரப்படும் நெல்மூடை ஒவ்வொன்றுக்கும் தலா மூன்று ரூபாவீதம் அறவிடப்படுவதாகவும் அறுவடைக் காலமாகையால் பெருமளவு பணம் வசூலாகின்றது என்றும் தெரியவருகின்றது.

## ஈச்சிலம் பத்தை சேருவிலவுடன் இணைப்பு?

(கொழும்பு)

சேருவிலபிரதேச சபையுடன் ஈச்சிலம்பத்தைக் கிராமத்தை இணைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் முயற்சி மேற்கொண்டுள்ளது

தமிழ்க் கிராமமான ஈச்சிலம்பத்தை பகுதியை சிங்களவர் பெரும்பான்மையாகும் வகையில் சேருவிலவுடன் இணைக்கும் இம்முயற்சியினால் அப்பகுதியில் வாழும் தமிழர்களை சிறுபான்மையாக்க சிறிலங்கா அரசு முயல்கின்றது. இவ்வாறான நடவடிக்கையால் தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களப்பிரதேசமாக மாறும் அபாயம் ஏற்படுச என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவியல் கல்வியகம் உதயம்

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவியல் கல்வியகம் ஒன்றை வட்டக்கச்சி றமேஸ் வீதியிலுள்ள நெசவுச் சாலை கட்டடத்தில் நிறுவியுள்ளது.

மேற்படி கல்வியகத்தில் க.பொ.த. உயர்தரம் கலை, வர்த்தக வகுப்புகளும் க.பொ. த. சாதாரணதரம், ஆண்டு 10, தொழில்நுட்ப வகுப்புக்கள், நுண்கலை வகுப்புக்கள் ஆகியவற்றை நடத்திவருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட முன்னேற்றத்திற்காக 4 வருடமாக சேவை செய்துவந்துள்ள இம் மாணவர் ஒன்றியம் அம் மாவட்டத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க அறிவியல் கல்வி அகங்களை நிறுவி வருகின்றது இதன்முதற் கட்டமாகவே வட்டக்கச்சியில் நிறுவப்பட்டது என்றும், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைப்படிப்பை தொடர இருக்கும் மாணவர்கள். படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்களே ஒருங்கிணைந்து இப்பணியினைச் செய்து வருகின்றார்கள் என ஒன்றியம் தெரிவித்துள்ளது.

### "போரூட்" பிரதிநிதிகள் வருவர்


போரூட் நிறுவன பிரதிநிதிகள் இருவர் நாளை 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றனர். விமான மூலம் பலாலிக்குவரும் இவர்கள் 'குமாரி' கப்பல் மூலம் வந்து சேருவர்

போரூட் நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி திரு. பி. போல் ஹென்றி ஹெரிலன் மற்றும்

## 31-ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும்

22. 2. 93

| மலர்வு: | மறைவு: |
|---|---|
| 11 | 28 |
| — | — |
| 8 | 1 |
| — | — |
| 1905 | 1993 |



### கணபதிப்பிள்ளை சின்னத்துரை

(நாகலிங்கம்) தும்பளை

முன்னாள் பிரபல வர்த்தகர் பருத்தித்துறை

எல்லோர்க்கும் மாமனாய், யாவர்க்கும் இனியவனாய்
இன்பதுன்பம் இரண்டிலும் எம்முடன் பங்குகொண்டு
இறைவனது ஆணையினால் எமைப்பிரிந்து சென்ற - எம்
அன்புத் தெய்வமே அரும் பெரும் மாமாவே
மாதம் ஒன்று ஆகியும் எம் மனதினின்று உங்கள் முகம்
மறைய முடியாது மறக்கவும் ஏலாது.

ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்

தும்பளை பருத்தித்துறை

இப்படிக்கு - மருமக்கள்.

(சி-6032)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-02-21

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்- தட்டா தெருச்சந்தியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

சுரேன் [திருச்சிற்றம்பலம் சுரேந்திரன் - 57, சிவரஞ்

யாழ்ப்பாணம். (4063)

## திருக்கணித பஞ்சாங்கம்

ஸ்ரீமுக புதுவருட (1993-94) திருக்கணித பஞ்சாங்கம் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது வியாபாரிகளுக்குத் தகுந்தகமிஷன் உண்டு விலை ரூபா 65 00 பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம். [4281]

## புலமைப் பரிசில் பரீட்சை

வருடந்தோறும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை 21. 02 93 ஞாயிறு மு ப. 8 00. மு. ப. 11.00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4320)

## சைனா மகசின்

கொப்பிகள், புத்தகங்களுக்கு கவர்போடக்கூடிய சைனா மகசின் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (4062)

## சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி சரியாக வழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (4308)

## அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம் கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி. (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்.) (சி-5918)

---

ஆர்.சுதர்சனா, எஸ்.ஜெயமனோகரி
எம். காதம்பரி ப. அம்பிகா

மிருதங்கம் : ரி. திருக்குமரன்

**5 20 — 5 40 பாட்டு**

எஸ். கவிதா
எஸ். லொயிஸ் சனுஷியா
பி. யாமினி, ஜே. ரஜிதா,
ஜெ. ஜெயபாரதி.
ஆர். அஷ்டலட்சுமி

வயலின் ; கிருஷ்ணவேணி மயில்வாகனம்

மிருதங்கம் ; பி. ரதிரூபன்

**5 40 — 6 00 இருவயலினிசை**

வித்யாசங்கர் திருமாறன்

மிருதங்கம் ; சதாவேல்மாறன்

**6 00 — 6.45 பாட்டு ஹம்ஸானந்தி சேதுபதி**

வயலின் ; சாந்தநாயகி சுப்பிரமணியம்

மிருதங்கம் ; எம். சிதம்பரநாதன்

**6·45 — 7 00 மங்கள விளக்கேற்றல்**

டாக்டர் கே. பாலசுப்பிரமணியம்
திரு. காசிலிங்கம் [காவோ]
திரு. தா பரராஜசிங்கம்
[அம்பாள் காட்வர் நீர்வேலி]
திரு. வே. வடிவேல் [வர்த்தகர்]
திரு.கா.பரமானந்தராஜா
(வர்த்தகர்)

தலைவர் : பி. கனகலிங்கம் (தலைவர் ப. நோ. கூ. சங்கம் புங்குடுதீவு)

சிறப்புவிருந்தினர்: பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) (யாழ். பல்கலைக்கழகம்)

**7 00 — 8.00 இசைக்கச்சேரி**

பாட்டு : எஸ். கணபதிப்பிள்ளை
வயலின் ; ஆர். ராதாகிருஷ்ணன்
மிருதங்கம் : எஸ். துரைராஜா

**8 00 — 9 15 ''நாட்டிய கலாகேந்திரா''**

மாணவிகள்வழங்கும் பரதநாட்டியம்

நட்டுவாங்கம் ; கிரிஷாந்தி ரவீந்திரா,
கிருஷ்ணரூபிணி சேனாதிராஜா
பாட்டு . ஞானகுமாரி சிவனேசன்
வர்ணராமேஸ்வரன்
மிருதங்கம் ; எஸ். சுகேந்திரன்
வயலின் : பாக்கியலட்சுமி நடராஜா

**9.15 — 10.15 ஆட்ட நாட்டுக் கூத்து**

செல்லையா மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்
"கண்ணகி வழக்குரை''

---

வாழ்த்துவோர்:

**ரூபன் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி

(சி-5965)

---

நொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவியல் கல்வி அகம் ஒன்றை மட்டக்களப்பு றமேஸ் வீதியிலுள்ள நெசவுச் சாலை கட்டடத்தில் நிறுவியுள்ளது.

மேற்படி கல்வி அகத்தில் க.பொ.த. உயர்தரம் கலை, வர்த்தக வகுப்புகளும் க.பொ. த. சாதாரணதரம், ஆண்டு 10, தொழில்நுட்ப வகுப்புக்கள், நுண்கலை வகுப்புக்கள் ஆகியவற்றை நடத்திவருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட முன்னேற்றத்திற்காக 4 வருடமாக சேவை செய்துவந்துள்ள இம் மாணவர் ஒன்றியம் அம் மாவட்டத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க அறிவியல் கல்வி அகங்களை நிறுவி வருகின்றது இதன்முதற் கட்டமாகவே மட்டக்களப்பில் நிறுவப்பட்டது என்றும், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைப்படிப்பை தொடர இருக்கும் மாணவர்கள். படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்களே ஒருங்கிணைந்து இப்பணியினைச் செய்து வருகின்றார்கள் என ஒன்றியம் தெரிவித்துள்ளது.

### "போரூட்" பிரதிநிதிகள் வருவர்

போரூட் நிறுவன பிரதிநிதிகள் இருவர் நாளை 22ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றனர். விமான மூலம் பலாலிக்குவரும் இவர்கள் 'குமாரி' கப்பல் மூலம் வந்து சேருவர்

போரூட் நிறுவனத்தின் வதிவிட பிரதிநிதி திரு. பி. போல் ஹன்றி ஹெமிலன் மற்றும் போரூட் நிறுவன திட்டப் பணிப்பாளர் திரு. எம். எவ் மயில்கார் ஆகியோரே யாழ். குடாவுக்கு வருகை தரவுள்ளனர். (யோ)

---

ஆங்கில ஆசிரியர்
தெரிவுப் பரீட்சை
06 மார்ச், 1993

துரித மீட்டல் வகுப்பு

1991 / 92 அரசாங்க
கேள்விப் பேப்பர்கள்
கைவசம் உண்டு

ஆரம்பிக்கும் திகதி:
**1993. 02. 22**

திங்கள் மாலை 4 00


ஷேக்ஸ்பியர்
அக்கடமி

04, பிள்ளையார் கோயில்
ஒழுங்கை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(4318)

---

மலர்வு:
11
—
8
—
1905



மறைவு:
18
—
1
—
1993

## கணபதிப்பிள்ளை சின்னத்துரை

(நாகலிங்கம்) தும்பளை

முன்னாள் பிரபல வர்த்தகர் பருத்தித்துறை

எல்லோர்க்கும் நல்லவனாய், யாவர்க்கும் இனியவனாய்
இன்பதுன்பம் இரண்டிலும் எம்முடன் பங்குகொண்டு
இறைவனது ஆணையினால் எமைப்பிரிந்து சென்ற - எம்
அன்புத் தெய்வமே அரும் பெரும் மாமாவே
மாதம் ஒன்று ஆகியும் எம் மனதினின்று உங்கள் முகம்
மறைய முடியாது மறக்கவும் ஏலாது.
ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்

தும்பளை
பருத்தித்துறை

இப்படிக்கு
- மருமக்கள்.

(சி-6032)

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993-02-21

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்- தட்டா தெருச்சந்தியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

சுரேன் [திருச்சிற்றம்பலம் சுரேந்திரன் - 57, சிவரஞ்சினிவீதி, நாயன்மார்கட்டு - யாழ். ]

யாழ் - காங்கேசன்துறை, வறணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மட்டு - கித்துள் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

மணி [பிலிப் அந்தோணி - சொறிக்கல்முனை, கல்முனை - அம்பாறை]

முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். புஷ்பராசா [தியாகராசா அகிலன் - அகிலன் வீதி, நீர்வேலி மத்தி- யாழ். ]

1992ஆம் ஆண்டு திருமலை - வேப்பங்குளம் முகாமிலிருந்து, 10ஆம் கட்டை முகாமிற்கு ரோந்து சென்ற சிறிலங்கா விமானப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

2-ம் லெப். கருணன் (இராசதுரை தெய்வேந்திரம் மூதூர் - திருமலை)

லெப். விக்னேஸ் - பனம்பாரன் (அருளப்பர் ஜஸ்ட்ஸ் . வல்வெட்டித்துறை மேற்கு - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6042)

நல்லூர் ... நூலகம் யாழ்ப்பாணம்.

## உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றி

(கொழும்புத்துறை)

நல்லூர் கோதிகணிமட்டத்தில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை 15வயது பெண்கள், 17 வயது பெண்கள் ஆகிய இரு பிரிவிலும் முதலாமிடத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. (24)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



2ஆம் லெப்டினன்ட்

**விக்கினேஸ்வரன் (விக்கி)**

**(வைரமுத்து சிவராசா)**

(யாழ்.தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவன்)

வீரஜனனம்: 20.08.1973 | வீரச்சாவு: 24.11.1992

தெல்லிநகர் கொல்லங்கலட்டி தனில்
திகழ்ந்தவை ரமுத்துத் தம்பதிகள்
வல்லபூக ராயரருளாலே பெற்ற
வடிவழகன் சிவராசா எனும் விக்கி
வெல்லுநர் வேங்கை லெப்டினனுமானான்
விடியலிலே தன்னாவி அர்ப்பணித்தான்
சொல்லொணாப் பாசமிகு சோதரனாம்
செயல்வீரன் விக்கினேஸ்வரனே வாழி!

தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

உந்தனது பிரிவால் ஏங்கிநின்ற குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(4321)

## 90-வது நினைவுநாளும் பிறந்த தினமும்

21.02.93



மண்ணில் முளையாக 21 — 02 — 1966

மண்ணில் விதையாக 24 — 11

---

மருத்தித்துறை/புலோலி
தெ. ப. பெ. உ. வி. கூ. சங்கம்
மந்திகை
புலோலி

## பதவி வெற்றிடம்

1. உற்பத்தி முகாமையாளர் (தற்காலிகம்)
2. வெல்லந் தொழிற்சாலை பொறுப்பதிகாரிகள் (தற்காலிகம்)
3. கல்வி உத்தியோகத்தர் (தற்காலிகம்)

ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவுத்திகதி:- 27. 02. 93**

விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம்

- பொதுமுகாமையாளர்

[கி-6062]

## 90-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம் 7-7-1974

வீரச்சாவு 24-11-1992

**வீரவேங்கை அரவிந்தா (கௌசலா)**

**(அழகதுரை சுகந்தி)**

பாண்டியன்குளம்

(பலாலியின் கிழக்குப்பக்கமாக அமைந்த வளலாய் இடைக்காடு மினி முகாம் காவலரண்கள் தகர்ப்பின் போது நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

வீரவேங்கையாகப் பாய்ந்தவளே!
வீரகாவியமா அங்கு படைத்தாய்

இன்று 21-02-93-ல் நடைபெறும் கிரியையில் போராளிகளும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அண்ணா - போராளி காளிதாசன்,
சகோதரர்கள், உறவினர்கள்;
சித்தப்பா செ. குணராசா

கரும்புள்ளியான்
பாண்டிக்குளம்
வவுனிக்குளம்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

---

## 90-ம் நாள் நினைவு



தாயின் மடியில் 01 09 1974

வளலாய் மண்ணில் வரலாறாய் 23. 11. 199?

**வீரவேங்கை கதிரவன்**

[கற்கண்டு விஜயலக்குணன்]

விழிசுட்டி, சங்கானை

பால் வடியும் உன் முகத்தை
பார்ப்பது நாம் எப்போது
பள்ளிப் படிப்பை வெறுத்தாய்
பந்த பாசத்தை துறந்தாய்
தன்மானத் தமிழனாய்
இத் தாய் மண்ணை நேசித்தாய்

காலைக் கதிரவனாய் ஒளி வீசும்
கதிரவன் அன்றோ எம் செல்வம்
களம் பல கண்டும் கலங்கிடா நெஞ்சுடன்
வளலாய் பகுதியிலே தீரத்துடன் போர் புரிந்தாய்
வந்து விட்டான் காலனவன் வளலாயில்

உன் கண்ணில் தோன்றும்
கனிவும் கலந்து விட்டதோ
நெஞ்சு பொறுக்குதில்லையடா
உன் பிரிவை நினைக்க
உள்ளம் பதறுகிறதே லக்குணா
எம் லட்சிய பாதையில் பூத்திருக்கும் மலரே
இன்று நீ கருகி விட்டனையோ

இலட்சிய பாதையில் எத்தனையோ மலர்கள்
பூத்து குலுங்கி நறுமணம் படைக்கின்றன
அதில் ஒரு பூ உதிர்ந்தால் இன்னொன்று மலரத்தானே செய்யும்

அதை எண்ணி ஆறுதலடைகிறோம்.

இவருடன் வளலாயில் வீரச்சாவடைந்த ஏனைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலியைச்செலுத்துகிறோம்.

இவருடைய 90-ம் நாள் நினைவாகிய 21. 02 93 இன்று இவரது உருவப்படம் சங்கானை சந்தியில் திரை நீக்கம் செய்யப்படும். இவ் வைபவத்தில் போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் கலந்து கொள்ளவும்.


உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள், அத்தான்,
அண்ணிமார்

விழிசுட்டி,
சங்கானை.

[கி-6065]

## 91-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 21



வீரச்சாவு: 24

(யாழ்.தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவன்)

வீரஜனனம்: 20.08.1973

வீரச்சாவு: 24.11.1992

தெல்லிநகர் கொல்லங்கலட்டி தனில்
திகழ்ந்தவை ரமுத்துத் தம்பதிகள்
வல்லபூத ராயரரு ளாலே பெற்ற
வடிவழகன் சிவராசா எனும் வீரன்
வெல்லுநர் வேங்கை வெட்டினனு மானான்
விடியலிலே தன்னாவி அர்ப்பணித்தான்
சொல்லொணாப் பாசமித சோதரனாம்
செயல்வீரன் விக்கினேஸ்வரனே வாழி!

தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

உந்தனது பிரிவால் ஏங்கிநின்ற
குடும்பத்தினர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

(4321)

## 90-வது நினைவுநாளும் பிறந்த தினமும்

21.02.93



மண்ணில் முளையாக

21
—
02
—
1966

மண்ணில் விதையாக

24
—
11
—
1992

## மேஜர் தமிழரசன் (டொச்சன்)

### (கந்தசாமி ஜெய்குமார்)

புன்னாலைக்கட்டுவன்

உன் குரல் கேட்டு
நகர்ந்ததோ தொண்ணூறு நாட்கள்
நம்பவே முடியவில்லை
டொச்சப்பா, டொச்சண்ணா, டொச்சர்மாமா
என்றழைத்த எல்லோர் உள்ளத்திலும்
துயரவெள்ளத்தைத் தந்து
அச்சுவேலி மண்ணிலே வீரச்சாவைத் தழுவினாய்
இன்று உன் பிறந்ததினம் - ஆனால்
நீ எம்முடன் இல்லை
இன்றும் உன் வீரம்
எம் நினைவில் நிலைக்கின்றது
மாவீரன் டொச்சனை நாம் மறப்போமா?
உன் இலட்சிய தாகம்
நிறைவு பெற பிரார்த்திக்கிறோம்

நீ பாசமுடன் பழகிய
ஐயா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
மற்றும் மழலைச் செல்வங்கள்.

பொ. இராசையா குடும்பத்தினர்.
ஏழாலை கிழக்கு,
குப்பிளான்.

(4294)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்
7-7-1974

வீரச்சாவு
24-11-1992

## வீரவேங்கை அரவிந்தா (கௌசலா)

### (அழகதுரை சுகந்தி)

பாண்டியன்குளம்

(பலாலியின் கிழக்குப்பக்கமாக அமைந்த வளலாய் இடைக்காடு மினி முகாம் காவலரண்கள் தகர்ப்பின் போது நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

வீரவேங்கையாகப் பாய்ந்தவளே!
வீரகாவியமா இங்கு படைத்தாய்

இன்று 21-02-93-ல் நடைபெறும் கிரியையில் போராளிகளும் உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
அண்ணா - போராளி காளிதாசன்.
சகோதரர்கள், உறவினர்கள்;
சித்தப்பா செ. குணராசா

கரும்புள்ளியான்
பாண்டிக்குளம்
வவுனிக்குளம்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
16.11.1974

வீரச்சாவு
21.02.1991

## 2-ம் லெப். புஸ்பராஜா

### (தியாகராஜா அகிலன்)

பாயிலே கிடந்து நோயிலே சாகாமே
போரிலே நின்றுயிர்விட்டாயே அகிலா!
சிரெல்லாம் பெற்று தமிழீழமே காணும் போதினிலே
ஊரெலாம் உன்புகழ்பேசும் மகனே

அப்பா, அம்மா,
தம்பி.

அகிலன் வீதி,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(4322)

இத் தாய் மண்ணை நேசித்தாய்

காலைக் கதிரவனாய் ஒளி வீசும்
கதிரவன் அன்றோ எம் செல்வம்
களம் பல கண்டும் கலங்கிடா நெஞ்சுடன்
வளலாய் பகுதியிலே தீரத்துடன் போர் புரிந்தாய்
வந்து விட்டான் காலனவன் வளலாயில்

உன் கண்ணில் தோன்றும்
கனிவும் கலைந்து விட்டதோ
நெஞ்சு பொறுக்குதில்லையடா
உன் பிரிவை நினைக்க
உள்ளம் பதறுகிறதே லக்குணா
எம் லட்சிய பாதையில் பூத்திருக்கும் மலரே
இன்று நீ கருகி விட்டனையோ

இலட்சிய பாதையில் எத்தனையோ மலர்கள்
பூத்து குலுங்கி நறுமணம் படைக்கின்றன
அதில் ஒரு பூ உதிர்ந்தால் இன்னொன்று மலரத்தானே செய்யும்
அதை எண்ணி ஆறுதலடைகிறோம்.

இவருடன் வளலாயில் வீரச்சாவடைந்த ஏனைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலியைச்செலுத்துகிறோம்.

இவருடைய 90-ம் நாள் நினைவாகிய 21.02.93 இன்று இவரது உருவப்படம் சங்கானை சந்தியில் திரை நீக்கம் செய்யப்படும். இவ் வைபவத்தில் போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் கலந்து கொள்ளவு

உன் பிரிவால் வாடும்

விழிசுட்டி,
சங்கானை.
[சி-6065]

அப்பா, அம்மா,
சகோதரர்கள், அத்தான்,
அண்ணிமார்

## 91-ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:
21
—
05
—
1974



வீரச்சாவு:
24
—
11
—
1992

## லெப். முக்கண்ணன் / உமா

(வெள்ளையா ஸ்ரீகருணன்)

'தமிழீழம்' காண
தானைத் தலைவரின் ஆணை ஏற்று
சென்றனையோ உமா!
இன்று நீ மடியலாம்-ஆனால்
உன் இலட்சியத்தை ஈடேற்ற
ஆயிரமாயிரமாய் புலிகள் பிறப்பார்கள்.

24-11-92 அன்று இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய வீரமறவர்களுக்கும் எமது வீர வணக்கத்தையும் இதய அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

- குடும்பத்தினர்

சிறுப்பிட்டிதெற்கு,
நீர்வேலி.

[சி-6066]

## ஆறுமுகம் நினைவு கிண்ணப்போட்டி

(வடமராட்சி)

அமரர் வி. கே. ஆறுமுகம் அவர்களின் நினைவுக் கிண்ண 3-ஆவது சுற்றுப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முடிவடைந்து 2-ஆவது பிரிவுசுற்றுப்போட்டி வல்லை தீருவில் மைதானத்தில் விரைவில் நடைபெறவுள்ளது. அதன்பின்னர் 1-வது சுற்றுப் போட்டியும் நடைபெறும். (யோ)

## உடுகம்பொலவின் நூல் அமெரிக்காவில் வெளியீடு

(கொழும்பு)

சிறிலங்கா அரசுப் பாதுகாப்புப் படைகளுடன் 'ஒளித்து விளையாடு' முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல நியூயோர்க்கில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1987 – 1990 காலப்பகுதியில் தென் இலங்கையில் இடம்பெற்ற பல சம்பவங்களை உள்ளடக்கியதாகவும் பிரச்சினைக்குரிய இந்த நூல் அமைந்துள்ளதாம்.

தென் இலங்கையில் மேற்படி காலப்பகுதியில் இடம்பெற்ற பல கொலைகள் பற்றியும், இந்தக் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களைப் பற்றிய விவரங்களும் இந்த நூலில் இடம்பெற்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.


யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

# பதவி வெற்றிடங்கள்

1. பதவி – வாகனச் சாரதி
   சம்பளத் திட்டம் – 312-11 – (13) 805 — 1260 / 25X7 — 35X8

தகைமைகள் – 5 ஆம் வகுப்பு கல்வித் தராதரமும் பஸ் / லொறி / ரக்டரில் பாரம் இழுக்கும் சாரதி அனுமதிப் பத்திரமும், 4 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

2. பதவி – வாகனச் சுத்திகரிப்பாளர்
   சம்பளத் திட்டம் – 314.14 – (16) 700 — 950 / 15 X 10 — 20 X 5

தகைமைகள் – கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் 1 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

5 ஆம் வகுப்பு கல்வித் தராதரத்துடன் நல்ல திடகாத்திரமான உடல் நிலை உடையவராக இருத்தல் வேண்டும்.

வயது எல்லை – 18 – 40 (இரு பதவிகளுக்கும்)

(சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது)

கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும்.

சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி – 28-02-93

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
18-02-93

பொது முகாமையாளர்.

(சி/6056)



# விறகைச் சிக்கனப்படுத்தும் இரட்டைச் சூட்டடுப்புகள்

நம்புவது சிரமம்; ஆனாலும் உண்மை.

- 30 வீத விறகுச் சிக்கனம்
- ஒரே அடுப்பில் இரு சமையல்கள்

விற்பனைக்கு வந்துவிட்டன!

முற்றிலும் புதிய தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்ட

இரட்டைச் சூட்டடுப்புகள்


## சர்வோதயாவில் ஒழுங்கீனங்கள்

(கொழும்பு)

அரசு சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் பற்றி விசாரித்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழு சர்வோதயத்தில் 49 ஒழுங்கீனங்களைக் கண்டுபிடித்துள்ளது.

சர்வோதயம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன் சின்னத்தம்பியின் ஆட்சேபனையை ஏழு பேரைக் கொண்ட ஆணைக்குழு ஏகமனதாக நிராகரித்தது.

ஆணைக்குழு விசாரணையின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒழுங்கீனங்களில் அநேகமானவை நிதி சம்பந்தமானவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் ராணுவ கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு சிறிலங்கா அரசு பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. அங்கு ஜனாதிபதி இடம் பெயர் சேவையும், அமைச்சுகளின் நடமாடும் சேவையும் நடைபெறவுள்ளதை அடுத்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளனவாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெருமளவு இராணுவத்தினரும் காவல் படையினரும் மட்டக்களப்பின் பிரதான நகரங்களில் குவிக்கப்பட்டு வருகின்றனர். அங்கு வாழும் மக்கள் மீதான கெடுபிடிகளும் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அங்கு தமிழ் இளைஞர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்கள் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மட்டக்களப்பு நாவலடி கடற்பரப்பில் கடற்படைக் கப்பல் ஒன்றும் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும் இதற்கு உதவியாகப் பல நீருந்து விசைப்படகுகளும் ரோந்துப் படகுகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மட்டக்களப்பு மக்கள் பதற்றத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

## தபால் அறிமுக அட்டைகள் பெருமளவில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

16.12.1992 இற்கு முன்னர் தபால் அறிமுக அட்டைக்கு யாழ். பிரதம தபாற்கந்தோர் மூலமாக விண்ணப்பித்தவர்களில் 100 க்கு மேற்பட்டோரது தபால் அறிமுக அட்டைகள் யாழ். பிரதம தபாற்கந்தோரில் தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகின்றது.

மேலும் இடம்பெயர்ந்தவர்களின் அடையாள அட்டைகளும் இவற்றுள் அடங்குகின்றன. ஏனைய தபாற்கந்தோர்களுக்கூடாக விண்ணப்பித்தவர்களும் அந்தந்தக் கந்தோர்களுக்குச் சென்று அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும், காலதாமதமாகும் அடையாள அட்டைகள் தபாலதிபர்களினால் திருப்பி அனுப்பப்பட்டுவிடும் எனவும், சம்பந்தப்பட்டவர்களைக் காரியாலய நேரங்களில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் வடமாகாண பிரதி அஞ்சலதிபர் எஸ். எம். சேதுகாவலர் அறிவித்துள்ளார்.

(யா)

## விடுவிக்கப்பட்டவர் மீது மீண்டும் வழக்குத் தாக்கல்

### அரசுமீது மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் மீது அவர்கள் முன்பு புரிந்த குற்றங்களுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை சிறிலங்கா அரசைக் கண்டித்துள்ளது. புனர்வாழ்வு முகாம்களிலிருந்து வெளியேறிய 107 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

புனர்வாழ்வு மையங்களிலிருந்து வெளியேறிய மூவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு கடந்த ஜூன் மாதத்தில் அவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகவும், வேறு சிலருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுதலை அடைந்தவர்களிடம் புதிய வாக்குமூலங்களைப் பதிவு செய்து வழக்குத் தாக்கல் செய்யப்படுவதாக சிறிலங்காவில் மனித உரிமைகள் நிலைமை பற்றிய மதிப்பீடு என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நூல் நிலையம் திறப்பு

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் திரு ஆ. சண்முகலிங்கம் தலைமையில் இம்மாத இறுதியில் இல 33, யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள பணிமனை அலுவலகத்தில் இலவச நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இங்கு திறந்துவைக்கப்படவுள்ள நூல் நிலையத்தில் உலக நாடுகளில் நடக்கும் செய்திகள் அடங்கிய பத்திரிகைகள், நூல்களும் பாடசாலைகளில் கல்வியைக் கற்று வருகின்ற மாணவர்களுக்கான பல உசாத்துணை நூல்கள் என்பனவும் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன என இயக்கத்தின் இலங்கைக் கிளையின் இணைச்செயலாளர் திரு. சி. சி. வரதராசா தெரிவித்துள்

## எதிர்க்கட்சிகள் கூட்டாக குற்றப்பத்திரிகை தயாரிப்பு

### – ஜனாதிபதியிடம் கையளிக்க முடிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் கூட்டாகக் குற்றப்பத்திரிகை போன்ற மகஜர் ஒன்றைத் தயாரித்து அதை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மகஜரின் பிரதிகள் வெளிநாட்டு ராஜதந்திரிகளிடமும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அரசின் மனித உரிமைகள் மீறல், பத்திரிகையாளர் அரச படைகளால் துன்புறுத்தப்படல், வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் சுதந்திரம் ஆகிய விஷயங்களை உள்ளடக்கியதாக இந்த மகஜர் அமையும்.

## வேலையை தாமதமாக்கும்

2. பதவி - வாகனச் சுத்திகரிப்பாளர்
சம்பளத் திட்டம் — 314.14 — (16) 700 — 950 / 15 X 10 — 20 X 5

தகைமைகள் - கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் 1 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
அல்லது
5 ஆம் வகுப்பு கல்வித் தராதரத்துடன் நல்ல திடகாத்திரமான உடல் நிலை உடையவராக இருத்தல் வேண்டும்.

வயது எல்லை - 18—40 (இரு பதவிகளுக்கும்)
(சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது)

கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும்.
பிணைப்பணம் செலுத்துதல் வேண்டும்.
சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
விண்ணப்பப் படிவங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவு திகதி - 28-02-93

291, ஸ்ரான்லி வீதி, பொது முகாமையாளர்.
யாழ்ப்பாணம்.
18-02-93 (சி/6056)


# விறகைச் சிக்கனப்படுத்தும் இரட்டைச் சூட்டடுப்புகள்

நம்புவது சிரமம்; ஆனாலும் உண்மை.

- 80 வீத விறகுச் சிக்கனம்
- ஒரே அடுப்பில் இரு சமையல்கள்

விற்பனைக்கு வந்துவிட்டன!

முற்றிலும் புதிய தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்ட

## இரட்டைச் சூட்டடுப்புகள்



❋ உங்கள் வீடுகளில் குறைந்த செலவில், கூடிய பயன்தரும் வகையில் கட்டித்தர தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக சக்திப் பகுதியினர் காத்திருக்கின்றனர்.
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

"சக்திப் பகுதி"

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்
தாவடி.

(இ/ 6059)


...ரது தபால் அறிமுக அட்டைகள் வாழ். பிரதம தபாற்கந்தோரில் தேங்கிக் கிடப்பதாக தெரியவருகின்றது.

மேலும் இடம்பெயர்ந்தவர்களின் அடையாள அட்டைகளும் இவற்றுள் அடங்குகின்றன. ஏனைய தபாற்கந்தோர்களுக்கூடாக விண்ணப்பித்தவர்களும் அந்தந்தக் கந்தோர்களுக்குச் சென்று அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும், காலதாமதமாகும் அடையாள அட்டைகள் தபாலதிபர்களினால்...

## நூல் நிலையம் திறப்பு

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் திரு ஆ. சண்முகலிங்கம் தலைமையில் இம்மாத இறுதியில் இல 33, யாழ். பருத்தித்துறை வீதியில் உள்ள பணிமனை அலுவலகத்தில் இலவச நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட உள்ளது.

இங்கு திறந்துவைக்கப்பட உள்ள நூல் நிலையத்தில் உலக நாடுகளில் நடக்கும் செய்திகள் அடங்கிய பத்திரிகைகள், நூல்களும் பாடசாலைகளில் கல்வியைக் கற்று வருகின்ற மாணவர்களுக்கான பல உசாத்துணை நூல்கள் என்பனவும் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன என இயக்கத்தின் இலங்கைக் கிளையின் இணைச்செயலாளர் திரு. சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார்.

நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு அவர் கூறியுள்ளார்.

(24)

## 'அரங்கம்' சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் வெளியிடும் "அரங்கம்" சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளியீட்டுவிழா சு. லிங்கேஸ்வரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் 24ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச்சஞ்சிகையை வெளியிட்டு பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரைநிகழ்த்துவார். அவரைத் தொடர்ந்து தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் அவர்களும் சிறப்புரை நிகழ்த்துவார். சஞ்சிகையின் ஆய்வுரையை திருமலை யோகேந்திரம், இணையவன், புதுவைஇரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்துவர்.

...காவலர் அறிவித்துள்ளனர்.

(பா)

இதனால் மட்டக்களப்பு மக்கள் பதற்றத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

## விடுவிக்கப்பட்டவர் மீது மீண்டும் வழக்குத் தாக்கல்

### அரசுமீது மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் மீது அவர்கள் முன்பு புரிந்த குற்றங்களுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை சிறிலங்கா அரசைக்கண்டித்துள்ளதுபுனர்வாழ்வு முகாம்களிலிருந்து வெளியேறிய 107 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

புனர்வாழ்வு மையங்களிலிருந்து வெளியேறிய மூவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு கடந்த ஜூலை மாதத்தில் அவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகவும், வேறு சிலருக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுதலை அடைந்தவர்களிடம் புதிய வாக்குமூலங்களைப் பதிவு செய்து வழக்குத் தாக்கல் செய்யப்படுவதாக சிறிலங்காவில் மனித உரிமைகள் நிலைமை பற்றிய மதிப்பீடு என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச் சபை லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சிகள் கூட்டாக குற்றப்பத்திரிகை தயாரிப்பு

### - ஜனாதிபதியிடம் கையளிக்க முடிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் கூட்டாகக் குற்றப்பத்திரிகை போன்ற மகஜர் ஒன்றைத் தயாரித்து அதை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மகஜரின் பிரதிகள் வெளிநாட்டு ராஜதந்திரிகளிடமும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அரசின் மனித உரிமைகள் மீறல், பத்திரிகையாளர் அரசபடைகளால் துன்புறுத்தப்பட்டமை, வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் சுதந்திரம் ஆகிய விஷயங்களை உள்ளடக்கியதாக இந்த மகஜர் அமையும்.

## வேலையை தாமதமாக்கும் போராட்டம் ஆரம்பமாகும்

### - பல்கலைக்கழக ஊழியர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசு தமது கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் வேலையைத் தாமதப்படுத்தும் போராட்டத்தை நடத்தப் போவதாக பல்கலைக்கழக ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் அறிவித்துள்ளனர். இப்போது அவர்கள் சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எங்கள் கோரிக்கைகள் பற்றி ஆலோசிப்பதாக அரசு 1989 இல் தெரிவித்திருந்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பல்கலைக்கழகங்கள் தொழிற்சங்க சம்மேளனச் செயலாளர் எச்.பி. ஆரியபால தெரிவித்தார்.

சம்பள உயர்வு மற்றும் ஓய்வூதியத்திட்டம் ஆகியவையே ஊழியர்களின் கோரிக்கையாகும்.

1990இல் மூடப்பட்ட பல்கலைக்கழக அச்சுக்கூடம் மொறட்டுவ வளாகத்தில் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது என்றும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் எச். பி. ஆரியபால தெரிவித்தார்.

## வவுனியா பகுதியில் திட்டமிட்ட குடியேற்றம்

வவுனியா மாவட்டத்தில் 500க்கு மேற்பட்ட சிங்கள முஸ்லிம் குடும்பங்களை சிறிலங்கா அரசு திட்டமிட்டு குடியேற்றி வருகின்றது.

அண்மையில் வவுனியா மேற்கு பகுதியில் 'கறுப்புநரி' இராணுவ நடவடிக்கைமூலம் தாம் கைப்பற்றிய தமிழ் பிரதேசங்களிலேயே தற்போது இத்திட்டமிட்ட குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

நல்லூர் பிர. நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

தான் வெளிச்சத்தில் இருப்பதாகக் கூறித்
தன் உடன்பிறப்பை வெறுப்பவன்,
இருளிலேயே இருப்பவனாவான்.

- இயேசுநாதர்

ஈழநாதம்

21, மிகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 21 - 02 1993
தொலைபேசி
[illegible]

## மேலும் ஒரு தடை

சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டு வடபகுதிக்கான தபால் சேவையை, குறிப்பாக வெளிநாட்டுத் தபால் சேவையை முடக்கியுள்ளது. சுமார் நான்கு மாதங்களாக வடபகுதிக்கு வெளிநாட்டுத் தபால்கள் எவையும் வந்து சேரவில்லை.

இதேவேளை வடபகுதிக்கான நூற்றுக்கணக்கான தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாகவும் அவற்றை சிறிலங்கா இராணுவத்தினரும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் சோதனை என்ற ரீதியில் உடைத்துப் பார்வையிட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட இந் நடவடிக்கையானது ஓர் அடிப்படை மனிதஉரிமை மீறல் ஆகும். அத்தோடு தபால் சேவையின் சர்வதேச சட்டங்களுக்கும் முரணானதாகும். அதாவது ஒருவரின் அந்தரங்கங்களை அரசாங்கம் சட்ட விரோதமாக அறிய முற்படுவது ஒரு கீழ்த்தரமான நடவடிக்கை ஆகும்.

வெளிநாடுகளில் இருந்து பெருந் தொகையான பணம் சட்டவிரோதமாக அனுப்பப்படுவதாகவும், தபால்கள் உடைக்கப்பட்டதினால் இரண்டரை லட்சம் அமெரிக்க டாலர் [ஒரு கோடியே 15 லட்சம் ரூபா] இவ்வாறு கைப்பற்றப்பட்டது எனச் சிறிலங்கா இராணுவமோ, அன்றி அரசாங்கமோ தெரிவிப்பதினால் மட்டும் இதனை நியாயப்படுத்த முடியாது. ஏனெனில் தபால்கள் ஊடாகச் சட்ட விரோதமாக பணம் அனுப்பினால் அதற்குரிய சட்ட நடவடிக்கை என்ன என்பதற்குச் சட்டங்கள் தெளிவாக உண்டு. அத்தோடு ஒருவரின் அந்தரங்கக் கடிதத்தை உடைப்பதற்கும் சட்டவிதிகள் உண்டு. அதைவிட்டு சோதனை என்ற பெயரில் சிறிலங்கா அரசாங்கம் செய்வதை கொள்ளை என்றே கூறவேண்டும். இது சட்டத்திற்கு முரணானது. மோசடித்தனமானது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் இக்கேவலமான நடவடிக்கையானது தனியாகத் தபால்களில் உள்ள பணத்தை அபகரிப்பது மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. தமிழர் தேசிய இனப் போராட்டத்தை அழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியுமாகும்.

# ஹட்சன் கொலை முயற்சி; ஐ.தே.க உட்பூசலின் விளைவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் போல் ஐக்கிய தேசியக் கட்சியிலும் உட்பூசல் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் ஹட்சன் சமரசிங்கா மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி கட்சி உட்பூசலுடன் சம்பந்தப்பட்ட நோக்கம் கொண்டதென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இக்கொலை முயற்சி தொடர்பாக உயர்மட்ட விசாரணை நடைபெற்று வருவதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு பதினான்கு முக்கிய ஐ.தே. கட்சி உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் வெளியேற்றப்பட்டனர். மேலும், மாத்தளை, சிலாபம், களனிப் பிரதேசங்களைச் சேர்ந்த கட்சி முக்கியஸ்தர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாசாவுக்கு அடுத்த பதவி யார் என்ற பதவிப் போட்டியும் ஐ.தே. கட்சியில் பலமாக உள்ளது. அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சுதந்திரக் கட்சியைப் போலத்தான் ஐ.தே.கட்சியிலும் நிலைமைகள் உள்ளதால் இது குறித்துத் திட்டவட்டமாக எதுவும் கூற முடியாது என்று அரசியல் அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆடைத் தொழிற்சாலைத் திறப்பு விழாக்களில் ஒரு அபயகுணசேகரா பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வது கட்சிக்குள் அதிருப்தியைத் தோற்றுவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஐ.தே. கட்சி இப்போது ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால் கட்சிக்குள் பிளவு எதுவும் ஏற்படாமல் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சங்கானை சவேரியார் ஆலயத்திற்கு ஆயர் விஜயம் செய்கிறார்

யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இன்று சங்கானை புனித சவேரியார் ஆலயத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். சங்கானையின் பங்கு பரிபாலராக முன்பு கடமையாற்றியவரான தற்போதைய ஆயர் புதிய பொறுப்பேற்றபின் இங்கு விஜயம் செய்யவிருப்பது இதுவே முதல் தடவையாகும். இவ்விஜயத்தின்போது சிறார்களுக்கு உறுதி பூசுதல், திருவருட் சாதனம் என்பன ஆயரினால் வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டு. நெற்கூடுகள் எரிப்பு; 13 பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்கூடுகள் உழவு இயந்திரம் ஆகியன சிறிலங்கா இராணுவத்தால் தீயிட்டு அழிக்கப்பட்டதுடன், பதின்மூன்று பொதுமக்களும் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு உறுகாமம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் நவுண்டவிளாமடு என்னும் இடத்தை சுற்றிவளைத்து அப்பகுதி விவசாயிகளின் நெற்காணிகளில் அறுவடை செய்த எட்டுச் சூடுகளைத் தீயிட்டுச் சாம்பராக்கியதுடன் அங்கிருந்த உழவு இயந்திரத்தையும் தீயிட்டு கொளுத்தினர்.

பின்னர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மயிலிப்போடி உமாரஞ்சன் (24), வேலுப்பிள்ளை ஜெயக்குமார் (27), ஐயங்கேணி ஏறாவூரைச் சேர்ந்த நாகமணி தங்கவடிவேல் (22), கந்தக்குட்டி பாலன் (32), கந்தக்குட்டி சின்னவன் (25), ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த செல்லையா உதயகுமார் (36), வேப்பவெட்டுவானைச் சேர்ந்த நாகமணி மகேந்திரன் (35), கொட்டவியைச் சேர்ந்த செல்லையா சின்னவன் (26), கொம்மாந்துறையைச் சேர்ந்த குமாரசாமி காட்டுராஜா (37), பாவற்குடாவைச் சேர்ந்த கந்தப்போடி புவனசிங்கம் [26], வந்தாறுமூலையைச் சேர்ந்த குமார் (20), முருகன் (26) ஆகியோருடன் பால்கியாபாரி ஒருவரையும் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர்.

## பொதுவிவாதம் தவிர்த்தமை கோழைத்தனமானதாகும்
### - சிறிமாவோவுக்கு பிரேமா கடிதம்

(கொழும்பு)

உத்தேசபொதுவிவாதத்தை கோழைத்தனமாகத் தவிர்த்துக்கொண்டுவிட்டீர்கள் எனசிறிலங்கா ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவிக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தங்களுக்கு அரசியல் சர்வாதிகாரி என்ற நாமத்தை தங்கள் புதல்வர் சூட்டியுள்ளதால் அரசியல் அமைப்புவிதிகளுக்கு ஏற்ப குடியியல் உரிமை பறிக்கப்பட்டு பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற அவப்பெயரையும் பெற்றுக் கொண்டீர்கள் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு எழுதியகடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## பேடன் பவல் தினம்

[கொழும்புத்துறை]

சாரணிய தந்தை பேடன் பவல் தினம் நாளை 22ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இவ்வைபவ தினத்துக்கு முன்னர் இயன்றளவு சாரணர்களைச் சேர்த்து புதிய குழுக்களை ஆரம்பித்து சாரண அபிவிருத்தியை மேற்கொள்ளுமாறு சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் தெரிவித்துள்ளார். [24]

## குளத்தில் மூழ்கி மரணம்

[கொடிகாமம்]

குளம் ஒன்றில் தாமரை இலை எடுக்கச் சென்றவர் வலிப்பு நோயினால் குளத்தினுள் மரணமானார்.

இச்சம்பவம் கொடிகாமம் தாவளை இயற்றாலையில் இடம்பெற்றது. பின்பு வயலில் அரிவி வெட்டுபவர்களால் இவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவராலு வயது [34] என்பவரே மரணமானவராவார். (86)

## மக்கள் ஆர்ப்பாட்டம்

(மானிப்பாய்)

கடந்த புதனன்று சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஆபிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குழுமி நின்று மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர் பிரான்பற்று என்னும் இடத்தைச் சேர்ந்த மக்களே மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரான்பற்று 07-ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதே இம்மறியல் போராட்டத்திற்குக் காரணமாகும். (07)

இந்திய மத்திய அமைச்சரவையில்

## 6 இணை அமைச்சர்களுக்கு புதிய பொறுப்புகள்

(டில்லி)

இந்தியாவின் மத்திய அமைச்சரவையில் ஆறு அமைச்சர்களுக்குபுதிய பொறுப்புக்களை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் வழங்கியுள்ளார். இதன்படி உணவுப்பொருள் துறை இணை அமைச்சர் கமாலுதீன் அகமது விற்குவர்த்தகத்துறை இணை துறை இணை அமைச்சும், ஊரகத்துறை இணை அமைச்சர் பி. கே. துங்கனுக்கு நிர்வாகத்துறை இணை அமைச்சும், தொழில்வளர்ச்சித்துறை இணை அமைச்சர் கிருஷ்ண சாகேபுக்கு கனரகத் தொழில் துறை இணை அமைச்சும் வழங்கப்பட்டிருப்பதாக

## மதுராந்தகத்தில் புகையிரதம் அ.தி.மு.கவினால் மறிப்பு

[சென்னை]

மத்திய அரசு பங்கீட்டுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் சீனியின் விலைகளைஉயர்த்தியிருப்பதைக்கண்டித்து மதுராந்தகம் புகையிரத நிலையத்தில் மறியல் போராட்டம் நடத்த முயன்ற அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற பட்டனர். இவர்களுடன் தொண்டர்கள் 150 பேரும் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதே வேளை, அரிசி மற்றும் சீனியின் விலை உயர்வைக் கண்டித்து தமிழ் நாட்டின்பல் வேறு இடங்களில் எம் ஜி ஆர் அண்ணா திராவிட முன்னேற்

கான தபால் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாகவும் அவற்றை சிறிலங்கா இராணுவத்தினரும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் சோதனை என்ற ரீதியில் உடைத்துப் பார்வையிட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட இந் நடவடிக்கையானது ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் ஆகும். அத்தோடு தபால் சேவையின் சர்வதேச சட்டங்களுக்கும் முரணானதாகும். அதாவது ஒருவரின் அந்தரங்கங்களை அரசாங்கம் சட்ட விரோதமாக அறிய முற்படுவது ஒரு கீழ்த்தரமான நடவடிக்கை ஆகும்.

வெளிநாடுகளில் இருந்து பெருந் தொகையான பணம் சட்டவிரோதமாக அனுப்பப்படுவதாகவும், தபால்கள் உடைக்கப்பட்டதினால் இரண்டரை லட்சம் அமெரிக்க டாலர் [ஒரு கோடியே 15 லட்சம் ரூபா] இவ்வாறு கைப்பற்றப்பட்டது எனச் சிறிலங்கா இராணுவமோ, அன்றி அரசாங்கமோ தெரிவிப்பதினால் மட்டும் இதனை நியாயப்படுத்த முடியாது. ஏனெனில் தபால்கள் ஊடாகச் சட்ட விரோதமாக பணம் அனுப்பினால் அதற்குரிய சட்ட நடவடிக்கை என்ன என்பதற்குச் சட்டங்கள் தெளிவாக உண்டு. அத்தோடு ஒருவரின் அந்தரங்கக் கடிதத்தை உடைப்பதற்கும் சட்டவிதிகள் உண்டு. அதைவிட்டு சோதனை என்ற பெயரில் சிறிலங்கா அரசாங்கம் செய்வதை கொள்ளை என்றே கூறவேண்டும். இது சட்டத்திற்கு முரணானது. மோசடித்தனமானது.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் இக்கேவலமான நடவடிக்கையானது தனியாகத் தபால்களில் உள்ள பணத்தை அபகரிப்பது மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. தமிழர் தேசிய இனப் போராட்டத்தை அழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியுமாகும்.

எரிபொருள் தடை, பொருளாதாரத் தடை, அத்தியாவசிய பொருள்கள் மீதான கட்டுப்பாடு என்பனவற்றின் தொடர் அம்சமாக இன்று இத் தபால் தடையும் அமுலாக்கப்படுகின்றது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை 'மணியோடர் பொருளாதாரம்' என அழைக்கப்பட்டது போன்று இன்றுவெளிநாட்டுத் தபால்களுடன் யாழ்ப்பாணப் பொருளாதாரம் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெளிநாட்டுத் தபால்கள் மீது அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகள் சிறிலங்கா அரசாங்கம் வடபகுதிமீது மேலும் ஒரு தடையை அமுலாக்கியுள்ளது என்பதே உண்மையாகும். இதன் மூலம் தமிழரின் பொருளாதாரத்தை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்து போராட்டத்தைத் தோற்கடித்து விடலாம் என சிங்கள அரசு நம்புகின்றது. இதற்காக அடிப்படை மனித உரிமை மீறல்களையும், சர்வதேச சட்டங்களையும், ஒப்பந்தங்களையும் மீற முற்பட்டுள்ளது.

ஆகையினால் தமிழ் மக்கள் தபால்கள் மீது அரசாங்கம் விதித்துள்ள தடைகளை எதிர்த்துப் போராட முன்வர வேண்டும். அதேவேளை உலகிலுள்ள மனித உரிமை ஸ்தாபனங்களும் மற்றும் உலகிலுள்ள நடுநிலைமை ஸ்தாபனங்களும் இம் மனித விரோதச்செயலைக் கண்டிக்க வேண்டியது அவர்களது தார்மீகக் கடமையாகும்.

## 13 பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் உழவு இயந்திரம் ஆகியன சிறிலங்கா இராணுவத்தால் தீயிட்டு அழிக்கப்பட்டதுடன், பதின்மூன்று பொதுமக்களும் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு உறுகாமம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் நவுண்டவிலாமடு என்னும் இடத்தை சுற்றிவளைத்து அப்பகுதி விவசாயிகளின் நெற்காணிகளில் அறுவடை செய்த எட்டுச் சூடுகளைத் தீயிட்டுச் சாம்பராக்கியதுடன் அங்கிருந்த உழவு இயந்திரத்தையும் தீயிட்டு கொளுத்தினர்.

பின்னர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மயிலிப்போடி உமாரஞ்சன் (24), வேலுப்பிள்ளை ஜெயக்குமார் (27), ஐயங்கேணி ஏறாவூரைச் சேர்ந்த நாகமணி தங்கவடிவேல் (22), சந்தக்குட்டி பாலன் (32), சந்தக்குட்டிசின்னையன் (25), ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த செல்லையா உதயகுமார் (36), வேப்பவெட்டுவானைச் சேர்ந்த நாகமணி மகேந்திரன் (35), கொட்டவியைச் சேர்ந்த செல்லையா சின்னவன் (26), கொம்மாந்துறையைச் சேர்ந்த குமாரசாமி காட்டுராஜா (37), பாலவிகுடாவைச் சேர்ந்த கந்தப்போடி புவனசிங்கம் [26], வந்தாறுமூலையைச் சேர்ந்த குமார் (20), முருகன் (26) ஆகியோருடன் பாலகிரியாபாரி ஒருவரையும் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர்.

## [illegible] சிறிமாவோவுக்கு பிரேமா கடிதம்

(கொழும்பு)

உத்தேசபொதுவிவாதத்தை கோழைத்தனமாகத் தவிர்த்துக்கொண்டுவிட்டீர்கள் எனசிறிலங்கா ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவிக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தங்களுக்கு அரசியல் சர்வாதிகாரி என்ற நாமத்தை தங்கள் புதல்வர் சூட்டியுள்ளதால் அரசியல் அமைப்புவிதிகளுக்கு ஏற்ப குடியியல் உரிமை பறிக்கப்பட்டு பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற அவப்பெயரையும் பெற்றுக் கொண்டீர்கள் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்குஎழுதியகடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் ஆர்ப்பாட்டம்

(மானிப்பாய்)

கடந்த புதனன்று சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் குழுமி நின்று மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர் பிரான்பற்று என்னும் இடத்தைச் சேர்ந்த மக்களே மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பிரான்பற்று 07-ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதே இம்மறியல் போராட்டத்திற்குக் காரணமாகும். (07)

இந்திய மத்திய அமைச்சரவையில்

## 6 இணை அமைச்சர்களுக்கு புதிய பொறுப்புகள்

(டில்லி)

இந்தியாவின் மத்திய அமைச்சரவையில் ஆறு அமைச்சர்களுக்குகூடுதல் பொறுப்புக்களை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் வழங்கியுள்ளார். இதன்படி உணவுப்பொருள் துறை இணை அமைச்சர் கமாலுதீன் அகமது விற்குவர்த்தகத்துறை இணை அமைச்சகம், முறைசாராசக்திப் பிரிவு இணை அமைச்சர் கிருஷ்ணகுமாருக்கு விவசாயத் துறை இணை அமைச்சகம், ஊரகத்துறை இணை அமைச்சர் பி. கே. தங்கனுக்கு நிர்வாகத்துறை இணை அமைச்சகம், தொழில்வளர்ச்சித்துறை இணை அமைச்சர் கிருஷ்ண சாகேபுக்கு கனரகத் தொழில் துறை இணை அமைச்சகம் வழங்கப்பட்டிருப்பதாக குடியரசுத் தலைவர் மாளிகையின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி துறைமுகத்தில் கப்பல்மறியல் செய்யமுயற்சி

- சட்டமன்ற உறுப்பினர் கைது

(சென்னை)

மத்திய அரசு சர்க்கரை, அரிசி மற்றும் உரம் ஆகியவற்றின் விலைகளை உயர்த்தி இருப்பதைக் கண்டித்து தூத்துக்குடி துறைமுகத்தில் கப்பல் ஒன்றை மறியல்செய்யமுயன்ற அ.இ. அ. தி. மு. கவின் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ. பி. ஆர். ரமேஷ் மற்றும் இருபத்தொன்பது உறுப்பினர்கள் நேற்று முன்தினம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளனர். நான்கு நாட்டுப் படகுகளில் சென்ற இவர்கள் துறைமுகம் நோக்கி வந்து கொண்டிருந்த கப்பல் ஒன்றை மறியல் செய்ய முற்பட்டனர்.

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில்

## மனித உரிமை மீறல் பற்றி ஆராய ஐ. நா. ஆணைக்குழு நியமனம்

(ஜெனீவா)

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குள்ளான பாலஸ்தீனியப் பிரதேசத்தில் இஸ்ரேலினால் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறப்படும் புகார்கள் பற்றி விசாரிக்க ஐ. நா. வின் மனித உரிமைகள் கமிஷன் ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது. [illegible] வின் செயற்பாட்டிற்கு முழு ஒத்துழைப்பையும் அளிக்கும்படி ஐ. நா. டெல் அவிவ் விடம் வற்புறுத்தியுள்ளது. எனினும் அமெரிக்கா, பிரிட்டன் என்பவற்றுடன் ரஷ்யாவும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

## மதுராந்தகத்தில் புகையிரதம் அ.தி.மு.கவினால் மறிப்பு

[சென்னை]

மத்திய அரசு பங்கீட்டுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் சீனியின் விலைகளைஉயர்த்தியிருப்பதைக்கண்டித்து மதுராந்தகம் புகையிரத நிலையத்தில் மறியல் போராட்டம் நடத்த முயன்ற அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மூன்று பேர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டனர். இவர்களுடன் தொண்டர்கள் 150 பேரும் கைது செய்யப்பட்டனர் பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதே வேளை, அரிசி மற்றும் சீனியின் விலை உயர்வைக் கண்டித்து தமிழ் நாட்டின்பல வேறு இடங்களில் எம் ஜி ஆர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

## போராட்டத்தை கைவிடுமாறு அ.தி.மு.கவிடம் கோரிக்கை

(சென்னை)

பங்கீட்டு அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டதற்கு மத்திய அரசுக்கு எதிராக அனைத்து இந்திய அண்ணா தி. மு. கழகத்தினர் செய்து வரும் போராட்டத்தைக் கைவிடுமாறு கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கேட்டுக்கொள்ள வேண்டும் என்று மத்திய நலத்துறை இணை அமைச்சர் கே.பி. தங்கபாலு கோவியுள்

மதுரையில் நேற்றுச் செய்தியாளரிடம் பேசிய அவர் மாநிலத்தை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முதலமைச்சர் செல்வி. ஜெயலிதா மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் அனைத்து இந்திய அண்ணா தி மு. கழகத்துக்கிடையே இப்போதுள்ள உறவு பற்றிக் குறிப்பிட்ட அவர் இது சிறிய பிரச்சினைதான் என்று கூறினார்.

## தொலைக்காட்சி நிலைய முன் பா. ம. கட்சி மறியல்

(சென்னை)

தமிழ் நாட்டில் தொலைக்காட்சிமூலம் ஹிந்தித் திணிப்பு நடைபெறுவதாகக் கூறி, அதை எதிர்க்கும் வகையில் பெரும் எண்ணிக்கையிலான பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் தலைமையில் நேற்றுச் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கட்சித் தலைமைக் காரியாலயத்திலிருந்து தொலைக்காட்சி நிலையத்துக்கு அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

நல்லூர் கிளை நூலகம்
மாநகர சபை ... மன்றம்
யாழ்ப்பாணம்

## பனங்கிழங்கு ஒருலட்சம் ஏற்றுமதி

பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளுக்கென கடந்த மாதத்தில் மட்டும் விமான மூலம் சுமார் ஒரு லட்சம் பனங்கிழங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

புழுக்கொடியல், ஒடியல், பனங்காய் பலகாரம் உட்பட பனம் பொருள்களும் இவ் ஏற்றுமதியில் இடம்பெற்றுள்ளன.

## பட்டினம் காத்தான் சம்பவம் இலங்கைத்தமிழர் மீது வழக்கு

(கொழும்பு)

தமிழ்நாட்டின் தென்பகுதியில் பட்டினம் காத்தான் நகருக்கு அருகே பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் வீதியோரத்தில் நின்று கொண்டிருந்த மற்றொருவரையும் கொலை செய்ததாக பதினொரு பேர் மீது தமிழகப் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். இலங்கைத் தமிழர்களான பதினொரு பேரும், தமிழகத்தவரான மற்றொருவர் மீதும் இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள போதும் திலிப் எனப்படும் இருபன் மற்றும், சிவத்தம்பி எனப்படும் சிவம் ஆகிய இருவர் மட்டுமே விசேட நீதிபதி எஸ். எம். சித்திக் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

## விசேட கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வட்டப் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாக சபையினருக்கான விசேட கூட்டமொன்று இன்று பிற்பகல் 4.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ப. தமிழன் தலைமையில் நடைபெறும். (மு)

## இரண்டாவது சடலமும் அடையாளம்காணப்பட்டது

நேற்று முன்தினம் இளாலிக் கடற்கரையில் ஒதுங்கிய இரண்டு சடலங்களில் அடையாளம் காணப்படாதிருந்த ஒரு சடலம் வே. குமார் (வயது 37 கொக்குவில் மேற்கு கொக்குவில்) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் கடந்த 13 ஆம் திகதி படகில் கிளிநொச்சி சென்றதாக கூறப்படுகிறது. (86)

## துப்பாக்கிச் சூடு

குருநகர் கடலில் மீன்பிடிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் துப்பாக்கி சூட்டினால் காயம் அடைந்துள்ளார்

நேற்று இரவு மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தில் டி. தாசன் (வயது 21) கடற்கரை வீதி, குருநகர் என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

## விமானம் கடத்தல்

போல்டிக் குடியரசான எஸ்ரோனியாவில் இருந்து புறப்பட்ட ரஷ்ய விமானம் ஒன்று கடத்தப்பட்டு வேற்று நாடு ஒன்றுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

இவ் விமானத்தைக் கடத்தியவர் விமானம் பின்லாந்துக்கு செலுத்தப்பட வேண்டும்என்று கட்டளைஇட்டார். இவ்விமானம் சுவீடன் நாட்டு தலைநகரில் தற்பொழுது தரையிறக்கப்பட்டுள்ளது. சுமார் 70 பயணிகள் இவ்விமானத்தில் உள்ளனர்.

மனைவியுடனும், குழந்தையுடனும் பயணம் செய்யும் இக்கடத்தல்காரரிடம் வெடிகுண்டுகளும் இருப்பதாகக் கூறப்படுகிறது. தான் அமெரிக்காவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று இவர் கேட்டுள்ளார்.

## ஒத்தி வைப்பு

இன்று உடுவில் மல்வத்திலும், 25-ம் திகதி அரியாலை கலைமகள் அரங்கிலும் இடம்பெறவிருந்த "களத்தில் காத்தான்", "அவலங்கள்" ஆகிய நாடக நிகழ்ச்சிகளும், 26-ம் திகதி யாழ் பல்கலைக்கழக மைதானத்திலும் நடைபெறவிருந்த சாந்தன் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரிப்பரீட்சை
B. A; B. COM.
PART I

பொருளியல்
S. வரதராஜன்
B. A (Hons)

Micro Econ 10-11
Macro Econ 3-4
சனி ஞாயிறு
ஆரம்பம்:
20-2-98

குறிப்பு: 21-2-98 க்குப் பின்பு புதிதாக மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 6057)

## புற்றுநோயாளர்கள்

எனவும் தெரிவிக்கப்படுகின்றது

இந்நிறுவனத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையாக இல. 228 பிரதான வீதியில் அமைந்துள்ள மேற்படி சங்கப்பணிமனையில் ஒரு வாய்பரிசோதனை நிலையம் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. இந்நிலையத்தில் ஒரு பல் வைத்திய நிபுணர் கடமையாற்றுவார் கிழமை நாட்களில் நான்கு நாள் இந்நிறுவனம் திறந்திருக்கும் மேலும் இந்நிறுவனத்தில் இருபது வயதிற்கு மேற்பட்டோர் இலவசமாக பரிசோதிக்கப்படுவர். அவர்களில் வாய்ப்புற்று நோயின் முன்னோடி நிலைமைகள் இருப்பின் அவைக்கான சிகிச்சை ஆலோசனை வழங்கப்படவுள்ளது இது தவிர எதிர்காலத்தில் வாய்ப்புற்று நோய் தோன்றாது இருக்க ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. இச்சேவையை பயன்படுத்த விரும்புவோர் மேற்படி பணிமனையுடன் கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும்.

இதுதவிர யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பகுதி, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வாட்டுத்தரிசிப்பில் சுகாதார ஊழியர்கள் மேற்படி சம்பந்தப்பட்டவர்களை வாய்ப்பரிசோதனை செய்து தேவையேற்படின் மேற்படி நிலையத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பிவைப்பர். (மா)

## வீரவணக்க கூட்டம்

சண்டிலிப்பாய் வட்டத்தில் 2 ஆம் மாதம் வீரச்சாவு அடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7. 30 மணிக்கு கட்டுடை கபாஸ் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் இடம் பெறவுள்ளது இந்த நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா விமானப்படையினது குண்டு வீச்சு விமானம் ஒன்றும், உலங்கு வானூர்தி ஒன்றும் நேற்று முற்பகல் 11-30 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களைச் சுற்றி நோட்டம் இட்டுச் சென்றன

மேற்படி விமானங்கள் மூளாய், பொன்னாலை, தொல்புரம், சுழிபுரம், சித்தன்கேணி ஆகிய பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்டுப் பறந்து சென்றதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

## பரிசளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ் மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையே நடாத்தப்பட்ட கலை, கலாசார, ஓவிய, விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா வைபவம் இன்று காலை பத்து மணிக்கு யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு டானியல் அன்ரனி தலைமையில் நடைபெறும். (24)

## மேரினால் நேற்று வந்தது

(வடமராட்சி)

கொழும்பிலிருந்து புறப்பட்ட 'மேரினால்' கப்பல் ஒரு தொகுதி உணவுப் பொருள்களுடன் நேற்று நண்பகல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துள்ளது. (வோ)

## மே 19 இல் நியமனப்பத்திரம் தாக்கல்

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் கட்டம் கட்டமாக நடைபெற உள்ளதாகவும், முதலாவது மாகாண சபைக்கான தேர்தல் நியமனப் பத்திரம் மே 19 ஆம் திகதி தாக்கல் செய்யப்படவேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## சிறுவர்

இந்த ஊர்வலத்தின் முடிவில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்களிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக் கொண்டபின் இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. தமிழ்ச்செல்வன் உறுதியளித்தார்.

## பல்கலை

இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றிருந்தும் 20,201 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவுள்ளது

மருத்துவபீடத்திற்கு 859 மாணவர்களும், பொறியியலுக்கு ...

## இசை மாமேதை

லலிதஸ்வர நாத பூபதி
நாதஸ்வர வித்துவான



அமரர்

## பி.எஸ். ஆறுமுகம்பிள்ளை

அவர்களுக்கு
எமது இதயம் கனிந்த அஞ்சலி உரித்தாகுக

இங்ஙனம்
நாதஸ்வர-தவில் கலைஞர்கள்

[4324]

## மரண அறிவித்தல்

## கதிரவேலு நல்லதம்பி

பெரியமாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த கதிரவேலு நல்லதம்பி அவர்கள் காலமானார். அன்னார் இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், கார்த்திகேசு (இளைப்பாறிய எழுதுவினைஞர்) தேவதாசன். சோமசுந்தரம் (நாதன் கூல்பார் சங்கத்தானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வத்தின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணியளவில் பெரியரசடியில் உள்ள மகனின் இல்லத்தில் இடம் பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

லிங்க வாசா,
பெரியரசடி,

தகவல்:
ந. சோமசுந்தரம் (மருமகன்)

## பிறந்தநாள் வாழ்த்து

குரும்பசிட்டி வைத்திய கலாநிதி
பகீரதன் - கல்பனா தம்பதிகளின்





அமரர்

## பி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை

அவர்களுக்கு

எமது இதயம் கனிந்த அஞ்சலி உரித்தாகுக

இங்ஙனம்

நாதஸ்வர-தவில் கலைஞர்கள்

[4324]

## மரண அறிவித்தல்

### கதிரவேலு நல்லதம்பி

பெரியமாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த கதிரவேலு நல்லதம்பி அவர்கள் காலமானார். அன்னார் இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், கார்த்திகேசு [இளைப்பாறிய எழுது வினைஞர்] தேவதாசன், சோமசுந்தரம் [நாதன் கல்பார் சங்கத்தானை] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வத்தின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணியளவில் பெரியரசடியில் உள்ள மகனின் இல்லத்தில் இடம் பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

லிங்க வாசா,
பெரியரசடி,
சாவகச்சேரி.
[சி-6067]

தகவல்:
ந. சோமசுந்தரம் (குஞ்சு)
(மகன்)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

நிகழும் ஆங்கிரச வருடம் ஜனவரி மாதம் 23-01-93 அன்று சிவபதமடைந்த எமது தந்தையார்,

அமரர்

### திரு. சின்னத்தம்பி சின்னராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக் கிருத்தியமும் மாசி மாதம் 11 ஆம் திகதி (22-02-93) நாளை திங்கட்கிழமை நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
தோப்பு,
அச்சுவேலி.
[4325]

இங்ஙனம்
குடும்பத்தினர்
பாலசிங்கம்
(மகன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.

பொருளியல்
S. வரதராஜன்
B. A (Hons)

Micro Econ 10-11
Macro Econ 3- 4
சனி ஞாயிறு
ஆரம்பம்:
20 - 2 - 93

குறிப்பு: 21-2-93 க்குப் பின்பு புதிதாக மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 6057)

...கான சிகிச்சை ஆலோசனை வழங்கப்படவுள்ளது இது தவிர எதிர்காலத்தில் வாய்ப்புற்று நோய் தோன்றாது இருக்க ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. இச்சேவையை பயன்படுத்த விரும்புவோர் மேற்படி பணிமனையுடன் கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும்.

இதுதவிர யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பகுதி, கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வாட்டுத்தரிசிப்பில் சுகாதார ஊழியர்கள் மேற்படி சம்பந்தப்பட்டவர்களை வாய்ப்பரிசோதனை செய்து தேவையேற்படின் மேற்படி நிலையத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பிவைப்பர். (பா)

## பிறந்தநாள் வாழ்த்து

குரும்பசிட்டி வைத்திய கலாநிதி
பகீரதன் - கல்பனா தம்பதிகளின்



அருமபுதல்வன்

### பகீரதன் பிரணவன்

இன்று (21-2-1993) அமெரிக்காவில் தனது இரண்டாவது பிறந்த நன்னாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வேளையில்-

உண்மைப் பொருளின் ஒரு நாமம் பெற்றவனே!
கண்ணின் மணியே! குமிழ் நகைச் செல்வனே!
பண்பிலே தமிழ் மணம் பரப்பி நீ, பாரினில்
எண்ணரிய கலையாவும் இனிதாய்க் கற்று
மண்ணின் மகனாய் மானங் காத்து
திண்ணிய நெஞ்சந் தாங்குவாய்! நீ வாழி!

— என்று வாழ்த்துகின்றோம்.

"அன்னை இல்லம்"
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை'
(4065)

அம்மப்பா, அம்மம்மா,
அப்பம்மா, ஆசைமாமா,
சித்தி, சித்தப்பா மற்றும்
ஜேர்மன் சித்தப்பா,
ஸ்ரீராஜ் குடும்பம்,
அம்மா மாமா குடும்பம்,

## விமானம் நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா விமானப்படையினது குண்டு வீச்சு விமானம் ஒன்றும், உலங்கு வானூர்தி ஒன்றும் நேற்று முற்பகல் 11-30 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களைச் சுற்றி நோட்டம் இட்டுச் சென்றன.

மேற்படி விமானங்கள் மூளாய், பொன்னாலை, தொல்புரம், சுழிபுரம், சித்தன்கேணி ஆகிய பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்டுப் பறந்து சென்றதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

## மெரினால் நேற்று வந்தது

[வடமராட்சி]

கொழும்பிலிருந்து புறப்பட்ட 'மெரினால்' கப்பல் ஒரு தொகுதி உணவுப் பொருள்களுடன் நேற்று நண்பகல் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துள்ளது. [வோ]

சிறுவர்

இந்த ஊர்வலத்தின் முடிவில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்களிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக் கொண்டபின் இந்த விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. தமிழ்ச்செல்வன் உறுதியளித்தார்.

14,000 தமிழ்

மேற்படி கிராமங்களில் உள்ள வீடுகள் பல இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன அத்துடன் இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

...ப்படவேண்டும் என்று இவர் கேட்டுள்ளார்.

### பரிசளிப்பு

[கொழும்புத்துறை]

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையே நடாத்தப்பட்ட கலை, கலாசார, ஓவிய, விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா வைபவம் இன்று காலை பத்து மணிக்கு யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு டானியல் அன்ரனி தலைமையில் நடைபெறும். (24)

## மே 19 இல் நியமனப்பத்திரம் தாக்கல்

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் கட்டம் கட்டமாக நடைபெற உள்ளதாகவும், முதலாவது மாகாண சபைக்கான தேர்தல் நியமனப் பத்திரம் மே 19 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலை

இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்றிருந்தும் 20,201 மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவுள்ளது.

மருத்துவப்பீடத்திற்கு 859 மாணவர்களும், பௌதிக விஞ்ஞானத்திற்கு 4,593 மாணவர்களும், பொறியியல் பிரிவிற்கு 2,446 மாணவர்களும், வாணிபம் - முகாமைத்துவத்திற்கு 4.739 மாணவர்களும், கலைப் பீடத்திற்கு 7,558 மாணவர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

## உள வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

20-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8370

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-3615, 24-5241, 27-7952, 26-4393, 41-5698, ?6-2737, 42-0733, 27-5823, 27-2761, 41-9167, 24 5258, 27-6024, 41-1799.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4457, 26-3582, 24-4465, 26-3183, 28-6546, 26-382, 24-9895, 26-2391, 42-0849 24-1040, 27-8877, 24-5734, 26-6688, 28-6853, 24-1250. 42-2432, 28-2049, 40-7207, 24-422, 26-5782.